## இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டம்- 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### 1.1 அபிப்பிராயம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

#### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 3.4 பில்லியன் நேரொத்த மிகையுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 4.3 பில்லியன் மிகையை விளைவித்திருந்தமையால், ரூபா 0.9 பில்லியன் அல்லது 26 சதவீதத்தால் மிகையில் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

#### 2.2 சொத்துக்கள் நிலைமை

இலங்கை வைப்புக்கள் காப்புறுதி திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காப்புறுதி திட்டத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூபா 9.7 பில்லியனாக இருந்ததுடன் ஒப்பிடும்போது முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான நேரொத்த மொத்தச் சொத்துக்கள் ரூபா 5.5 பில்லயினாக இருந்தது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த மொத்தச் சொத்தில், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் ரூபா 8.8 பில்லியன் அல்லது 91 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.